அல்லது கூட்டித்தர இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீடுகட்டுவோர் சங்கங்களில் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கின்றபோது ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு அவசியம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய மிகவும் நலிவடைந்த மக்களின் நலனைக் கருதி, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜே.வி.வி.டி. மூலம் அரசு வீடு கட்டி, வழங்குகிறது. அதைப்போல, அதற்கு அடுத்தபடியாக மிகவும் நலிவடைந்த சமுதாயத்தைச் சேர்ந்த, குறிப்பாக, சீர்மரபினர் என்கின்ற பிரிவைச் சேர்ந்தவர்கள், எம்.பி.சி. என்கின்ற கேட்டகிரியில் வருகின்றார்கள். அவர்களுக்கு, அந்தப் பயனாளிகளைத் தேர்வு செய்யும்போது முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குவதற்கு எந்தவிதமான முன்னுரிமையும் வழங்க இயலாது. அப்படி முன்னுரிமை வழங்க வேண்டுமென்று சொன்னால், ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தகுதியைக் கூறி, தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்கின்ற சூழ்நிலை வரும். எனவே, காத்திருப்போர் பட்டியல் அங்கே வரையறுக்கப்பட்டு பதிவு மூப்பு அடிப்படையில் இன்றைக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 392, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

392–

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட செங்கல் சூளை மற்றும் கயிறு திரித்தல் தொழில்களுக்கு நிதி உதவி அளித்தல்.

***16894–டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் பெரு வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான செங்கல் சூளை மற்றும் கயிறு திரித்தல் முதலிய தொழில்களை மறுபடியும் தொடங்க அரசு நிதி உதவி செய்யுமா?

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சேதம் ஏதும் ஏற்பட்டதாக அறிக்கையில் இல்லை. ஆனால், பெரும் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான செங்கல் சூளை தொழில்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் பெரும் மழையால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானது இந்த மாவட்டம். இந்த நேரத்தில் செங்கல் சூளை வைத்து தொழில் செய்பவர்களும், கயிறு தொழில் செய்பவர்களும் மிகுந்த பாதிப்பு அடைந்துள்ளார்கள். அவர்களால் தொடர்ந்து தொழில் செய்ய முடியவில்லை. அவர்கள், தொழிலைத் தொடர்ந்து செய்ய, மானிய முறையில் கடன் உதவி செய்துதர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சேதம் ஏற்பட்டதாக எந்தவிதமான தகவலும் அரசுக்குக் கிடைக்கவில்லை. செங்கல் சூளைத் தொழிலுக்கு மட்டும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சேதத்திற்கு வெள்ள நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 50,000 கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார்கள். அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. விரைவாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், அரசு பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் அவர்கள் தொடர்ந்து தொழில் செய்ய 'டிக்' மூலமாகவோ, வங்கி மூலமாகவோ அவர்களுக்குத் தனியாகக் கடனுதவி செய்ய முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, முறையாக விண்ணப்பம் கொடுத்தால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. அப்பு நடேசன்.

[1994 ஏப்ரல் 26

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலே 300–க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் சேதமடைந்தன. அதற்காக ஒவ்வொரு செங்கல் சூளைக்கும் 15,000 ரூபாய் வீதம் 45 இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அரசுக்கு எழுதியிருப்பதாக என்னிடம் கூறியிருந்தார்கள்; காண்பித்தார்கள். அந்தச் செயற்குறிப்புகள் அரசிடம் வந்துள்ளனவா ? மாண்புமிகு அமைச்சரவர்கள் 50,000 ரூபாய் மானியம் மொத்தம் கொடுப்பதற்காக இங்கே அறிவுரைகள் வந்திருப்பதாகக் கூறினார்கள். அதுமட்டுமல்லாமல் அந்தச் செங்கல் சூளைகள் இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாகச் செயல்பட்டு வருகின்றன. அந்தச் செங்கல் சூளைகளுக்கு இந்த வருஷம் சேல்ஸ் டாக்ஸ் போட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அந்த சேல்ஸ் டாக்ஸிலிருந்தும் அவர்களை–அந்த சேல்ஸ் டாக்ஸை நீக்கி அந்த ஏழை தொழிலாளிகளைக் காப்பாற்ற அரசு முன் வருமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருவெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட செங்கல் சூளை பற்றித்தான் மூலக் கேள்வி உள்ளது. ஆகையால் இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 393, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். 393–

மானாவாரி நிலங்களில் எண்ணெய் வித்துக்கள் பயிரிட அரசு மானியம் வழங்குதல்.

*22018–திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வெம்பக்கோட்டை பகுதியிலுள்ள மானாவாரி நிலங்களில் அரசு மானியம் வழங்கி எண்ணெய் வித்துக்கள் பயிரிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின் கீழ் வெம்பக்கோட்டை பகுதியில் சுமார் 2000 எக்டேர் மானாவாரி நிலங்களில் பயிராகும் எல்லா எண்ணெய் வித்துப் பயிர்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.